www.kalvikural.com

# பாடம் : கணக்குப்பதிவியல்
# வகுப்பு : 12ம் வகுப்பு

## மெல்லக் கற்கும் திறன் கொண்ட மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய பாடப்பகுதிகள்

# பாட வினாத்தாள் அமைப்பு (Blue Print)

www.kalvikural.com

| பதிலளிக்க வேண்டிய வினாக்கள் | | 30/30 | 10/14 | | 5/8 | | 3/5 | மொத்த ம / பெ |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாடஎண் | பாடம் | 1 ம/பெ | 5 ம/பெ | | 12 ம/பெ | | 20 ம/பெ | |
| | | | க/கு – 7 | தியரி– 7 | க/கு –5 | தியரி –3 | | |
| 1. | இறுதி கணக்கு | 5 | 1 | 1 | 1 (க.வி) | – | 1 | 47 |
| 2. | ஒற்றைப் பதிவு முறை | 4 | 1 | 1 | 1 (க.வி) | – | 1 (க,வி) | 46 |
| 3. | தேய்மானக் கணக்கு | 4 | 1 | 1 | 1 | 1 | – | 38 |
| 4. | விகிதப் பகுப்பாய்வு | 4 | 1 | 1 | 1 | – | 1 | 46 |
| 5. | ரொக்கத் திட்டப்பட்டியல் | 2 | 1 | 1 | – | 1 | 1 | 44 |
| 6. | கூட்டாண்மை அடிப்படைக் கருத்துகள் | 6 | 1 | 1 | 1 | 1 | | 60 |
| 7. | கூட்டாளி சேர்ப்பு | | | | | | 1 (க,வி) | |
| 8. | கூட்டாளி விலகல் | | | | | | | |
| 9. | நிறுமக் கணக்குகள் | 5 | 1 | 1 | 1 | – | 1 | 47 |

www.kalvikural.com

# ஒரு மதிப்பெண் வினாக்கள்

- பாட புத்தகத்தில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்களை ஒரு பாடத்திற்கு ஒரு வினாத்தாள் என பாடவாரியாக தனித்தாளில் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் நகல் எடுத்து திரும்ப திரும்ப தேர்வு வைத்து மதிப்பீடு செய்தல்.

- கணக்கீடு சார்ந்த ஒரு மதிப்பெண் வினாவிற்கு நிதானமாகவும், தெளிவாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட முறை மாணவர்களுக்கு விளக்கமாக நடத்தல்.

- கணக்கிடுதல் சார்ந்த ஒரு மதிப்பெண் வினாக்களை சொந்தமாக தயாரித்து மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் நகல் எடுத்து தேர்வு நடத்தி மதிப்பீடு செய்தல்.

# தனிப்பட்ட முறையில் கணக்கீடுகள் செய்து காட்டப்பட வேண்டிய ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. முதல்மீது வட்டி கணக்கிடுதல் (ம) எடுப்பு மீது வட்டி கணக்கிடுதல் (ம) கொடுபட வேண்டிய கடன் மீது வட்டி கணக்கிடுதல்.
2. கணக்கியல் சமன்பாட்டின் மூலம் சொத்துக்கள் (ம) பொறுப்புகள் (ம) முதல் கணக்கிடுக.
3. கடன் விற்பனை (ம) கடன் கொள்முதல் கணக்கிடுதல்.
4. இயந்திரம் விற்றதில் ஏற்படும் இலாபம் (ம) நட்டம் கணக்கிடுதல்.
5. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பினை கணக்கிடுதல்.
6. பங்கு முதலினக் காப்பு (ம) அழைக்கப்படாத முதல் (ம) ஒப்பிய முதல் (ம) ஒப்பாத முதல் போன்றவற்றைக் கணக்கிடுதல்.

இம்முறையை கையாளும்போது 30 மதிப்பெண்களுக்கு 20 மதிப்பெண்கள் உறுதியாக பெறமுடியம்.

www.kalvikural.com

# 5– மதிப்பெண் வினாக்கள்

## கருத்தியல் (தியரி) வினாக்கள் – 7, கணக்குகள் – 7

### பதிலளிக்க வேண்டியவை (10 வினாக்கள் மட்டும்)

- கருத்தியலுக்கு முக்கியத்துவம் தர வேண்டிய பாடங்கள்

1. இறுதிக் கணக்குகள்
2. ஒற்றைப் பதிவு முறை
3. தேய்மானக் கணக்குகள்
4. ரொக்கத் திட்டப்பட்டியல்

மேற்கண்ட பாடங்களில் உள்ள வினாக்களுக்குரிய விடையை உரிய முறையில் விளக்கம் செய்த பின் மாணவர்களுக்குள் குழுக்களை ஏற்படுத்தி ஒப்புவித்தல் மற்றும் தேர்வு வைத்து மதிப்பீடு செய்தல்.

www.kalvikural.com

# 5– மதிப்பெண் வினாக்கள்

## ❖ கணக்குகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டிய பாடங்கள்

1. இறுதிக் கணக்குகள் (சரிகட்டுப் பதிவு, மாற்றுப் பதிவு)
2. ஒற்றைப் பதிவு முறை (விடுபட்ட தொகையை கணக்கிடுதல்)
3. தேய்மானக் கணக்குகள் (தேய்மான விகிதம் கணக்கிடுதல்)
4. ரொக்கத் திட்டப்பட்டியல் (மாதத்தின் இறுதி ரொக்க இருப்பினை கணக்கிடுதல்)
5. நிறுமக் கணக்குகள் (பங்குகளை வட்டத்தில் (அ) முனைமத்தில் வெளியிடுதல்- குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

இப்பாடப்பகுதிகளில் உள்ள கணக்குகளைத் தவிர கூடுதல் கணக்குகளை சொந்தமாக தயாரித்து நகலெடுத்து தேர்வு வைத்து மதிப்பீடு செய்தல் மற்றும் அக்கணக்குகளை வீட்டு பயிற்சியாக செய்து வரச் செய்து மாணாக்கரை தயாரித்தல்.

பெறக்கூடிய மதிப்பெண்கள் 9 x 5 = 45

www.kalvikural.com

# 12– மதிப்பெண் வினாக்கள்

**மொத்த வினாக்கள் -- 8 (கருத்தியல் (தியரி) வினாக்கள் – 3, கணக்குகள் – 5)**

**பதிலளிக்க வேண்டியவை 5 வினாக்கள் மட்டும்**

**வினா எண் 45**

(அ) இறுதிக் கணக்குகள் (கடனாளிகள் மீது வாராக்கடன், வாரா ஐயக் கடன் ஒதுக்கு, தள்ளுபடி ஒதுக்கு. சரிகட்டுப் பதிவு மற்றும் இறுதிக் கணக்கில் தோன்றும் விதம்)

அல்லது

(ஆ) ஒற்றைப் பதிவு முறை ( நிலையறிக்கை முறையில் இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்)

**வினா எண் 45 க்கு கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டுமென்பதால் பாடப்பகுதிகளில் உள்ள வினாக்களை தவிர கூடுதல் வினாக்களை தயாரித்து தினமும் ஒரு கணக்கு வீதம் வீட்டு பயிற்சியாக (Home Test) செய்து வரச் சொல்லி அடுத்த நாள் சரிபார்த்து மாணாக்கரை தயார் செய்தல்.**

www.kalvikural.com

# 12– மதிப்பெண் வினாக்கள்

## ❖ கருத்தியலுக்கு முக்கியத்துவம் தர வேண்டிய பாடங்கள்

1. தேய்மானக் கணக்குகள் (வினாத்தாளில் வினா எண் 46)
2. ரொக்கத் திட்டப்பட்டியல் (வினாத்தாளில் வினா எண் 47)
3. கூட்டாண்மைக் கணக்குகள் (வினாத்தாளில் வினா எண் 48)

- மேற்கண்ட பாடங்களில் உள்ள வினாக்களுக்கு எளிய முறையில் விடை தயாரித்து கொடுத்து விளக்கம் அளித்தல்.
- மேலும் சிறப்பு வகுப்புகளில் அவ்வினாக்களை தேர்வு வைத்து மாணக்கர் முன்னிலையில் மதிப்பீடு செய்து தவறிருப்பின் அதைச் சுட்டிக்காட்டி சரி செய்தல்.

**பெறக்கூடிய மதிப்பெண்கள் 4 x 12 = 48**

www.kalvikural.com

# 20– மதிப்பெண் வினாக்கள்

**கணக்குகள் – 5**

**பதிலளிக்க வேண்டியவை (3 வினாக்கள் மட்டும்)**

- **‘வினா எண் 53 – கட்டாயம் விடையளிக்க வேண்டிய வினா ஆகும்.**

1. **இறுதிக் கணக்குகள் (வினாத்தாளில் வினா எண் 54)**
2. **ரொக்கத் திட்டப்பட்டியல் (வினாத்தாளில் வினா எண் 56)**

**மேற்கண்ட பாடப்பகுதி கணக்குகளை ஒரு பாடத்திற்கு நான்கு கணக்குகள் வீதம் சொந்தமாக கணக்குகளை தயாரித்து அதை மட்டும் கணக்கீடு செய்ய பழக்குதல் மற்றும் வீட்டு பயிற்சி செய்து வர வைத்தல். மேலும் சிறப்பு வகுப்புகளில் தேர்வு வைத்து உடனடியாக மதிப்பீடு செய்து அதில் ஏற்படும் பிழைகளை சரி செய்தல்.**

**பெறக்கூடிய மதிப்பெண்கள் 2 x 20 = 40**

www.kalvikural.com

# இம்முறையைப் பின்பற்றும் பொழுது மாணவர்கள் பெறக்கூடிய மதிப்பெண்கள்

- 1 மதிப்பெண் வினாக்கள் 20 x 1 = 20
- 5 மதிப்பெண் வினாக்கள் 9 x 5 = 45
- 12 மதிப்பெண் வினாக்கள் 4 x 12 = 48
- 20 மதிப்பெண் வினாக்கள் 2 x 20= 40

**மொத்த மதிப்பெண்கள் = 153**

**மெல்ல கற்கும் திறன் கொண்ட மாணவர்கள் இம்முறையைப் பின்பற்றும் போது தேர்வில் தேர்ச்சி பெறுவது மிகவும் எளிது.**

www.kalvikural.com

# விடியும் என விண்ணை நம்பும் நீ
# முடியும் என உன்னை நம்பு
# வெற்றி நிச்சயம்

நல்வாழ்த்துக்களுடன் ...

**ந,சிவநாதன்,** முதுகலை ஆசிரியர்,
எஸ்.எஸ்.வி.மே.நி.பள்ளி, கொடுமுடி.
ஈரோடு மாவட்டம்